**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC. 102/2021**
**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Caste | : |
| Father 's Name / Husband Name | : ராமசந்திரன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(12.03.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மதுரை மாவட்டம் சிந்துபட்டி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகின்றேன். இதற்கு முன்பு மேற்படி காவல் நிலையத்தில் பணிபுரிந்த சார்பு ஆய்வாளர் திரு.மாயன் மற்றும் ஆய்வாளர் திருமதி. சிவசக்தி ஆகியோர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்களது எழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் தற்போது அவர்களுக்கு பதிலாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கின்றேன். கடந்த 05.11.2020ம் தேதி 11.15 மணிக்கு மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.மாயன் அவர்கள் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும்போது ஒச்சம்மாள என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 968/2020 பிரிவு 394 இதச வின் படி வழக்கு பதிவு செய்தார். **மேற்படி அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும்**. பின்பு மேற்படி சார்பு ஆய்வாளர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை தேடி வந்த நிலையில் 04.11.2020ம் தேதி 15.45 மணிக்கு உச்சபட்டி ஊரணி அருகே இருந்தவரை

காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்பு மேற்படி சார்பு ஆய்வாளர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு விசாரணையை காவல் ஆய்வாளர் திருமதி.சிவசக்தி என்பவர் மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று 05.11.2020ம் தேதி மதியம் 12.45 மணிக்கு சாட்சிகள் காசிநாதன் மற்றும் ராமநாதன் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.8** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.9 ஆகும்**. மேலும் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரியை 05.11.2020ம் அன்று கைது செய்து விசாரணை செய்த போது எதிரி தாமாக முன் வந்து கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 10** ஐ சாட்சிகள் பாண்டி மற்றும் கருப்பு ஆகியோர்களின் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் தொடர்ச்சியாக 17.00 மணிக்கு வழக்கு சொத்தான 32 கிராம் எடையுள்ள தங்க செயினை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **அந்த அத்தாட்சி அ.சா.ஆ.11 ல் கைப்பற்றி, படிவம் 91 அ.சா.ஆ. 12 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்**. பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து தனது விசாரணையின் படி சட்டமாறுதல் அறிக்கையை காவல் ஆய்வாளர் தாக்கல் செய்துள்ளார். **அந்த சட்டமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு எதிரி மீது சட்டப்பிரிவு 394, 457 இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளித்துள்ளதால் எனக்கு விசாரணை பற்றி தெரியாது என்றும் பொய்யான தகவல்களை தயார் செய்து எதிரியின் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை